(ஆ) எல்லா மாணவர்களுக்கும் போதிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Hindi will not be taught in any of the standards in elementary schools.

(*b*) Does not arise.

SRI A. VEDARATHNAM : ஆரம்பப் பள்ளிகளில் ஆங்கிலம் போதிக்கப்பட்டு இருக்கிறது. ஆங்கிலத்திற்குக் கொடுத்திருக்கும் அந்தஅளவு சலுகையையாவது நம்தேசிய மொழியாகிய ஹிந்திக்குக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா ? அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : மொழிப் பிரச்னை சம்பந்தமாக எல்லோரும் கலந்தாலோசித்து ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறோம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது தான் அரசாங்கத்தின் கொள்கை.

Allotment of poramboke lands to Harijans

*25 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of Sri M. C. Muthukumaraswamy) : கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலூக்காவில் ஹரிஜனங்களுக்காக ஒதுக்கியுள்ள ரெவின்யூ புறம்போக்கு நிலங்களின் விஸ்தீர்ணம் என்ன ?

(ஆ) அவைகளில் ஹரிஜனங்களின் உபயோகத்திலுள்ள நிலங்களின் விஸ்தீரணம் எவ்வளவு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No cultivable poramboke land has been reserved for the Harijans but an extent of 9·61 acres of Natham poramboke has been reserved for the provision of house-sites to the Harijans.

(*b*) Out of an extent of 9·61 acres of Natham poramboke an extent of 5·54 acres of land is under the occupation of the Harijans.

SRI K. B. S. MANI : தஞ்சாவூர் ஜில்லாவில் குடியிருப்புப் பிரச்னை மிக நெருக்கடியான நிலையில் இருப்பதற்குக் காரணம், அந்த ஜில்லாவில் எல்லா நிலங்களும் மடாலயங்களுக்கே சொந்தமாக இருப்பது தான். எனவே அங்கே சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ஹரிஜனங்கள் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு எவ்விதத் தடையும் இல்லாதபடி முன் கூட்டியே ஒரு உத்தரவு போட சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சர்க்கார், தங்களுக்குச் சொந்தமான நிலங்கள் உள்ள இடங்களில் அவைகளை ஹரி ஜனங்களுக்கு தாராளமாகத்தான் கொடுக்கிறார்கள். அவை போதிய அளவில் இல்லை. ஆகையால் நிலங்களை acquire செய்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வாறு acquire செய்யப் பட்டுள்ள இடங்களுக்குச் செல்ல ஹரிஜனங்கள் மறுக்கிறார்கள்.

SRI K. B. S. MANI : அது வாஸ்தவமே. ஹரிஜனங்கள் அந்த இடங்களுக்குப் போகாததற்குக் காரணம் அந்த இடங்கள் பள்ளங் களிலோ ஆற்றுப் படுகைகளிலோ இருப்பது தான்; acquire பண்ணப்பட்டுள்ள இடங்கள் மிக மோசமாகவும் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு ஏற்றவையாக இல்லாமலும் இருக்கின்றன. இந்தக் காரணங்களால் தான் அவர்கள் அந்த இடங்களுக்குப் போகவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அந்த இடங்கள் ஜில்லா ஆபீசர்களால் பார்வையிடப்பட்டு இந்த விஷயங்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக் கின்றனவா ? அப்படியானால் அவைகளை ரத்து செய்துவிட்டு வேறு இடங்களை acquire செய்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

5th February 1959]

THE HON. SRI M. A. MANICKAVELU : ஏதோ சில இடங்களில் கனம் அங்கத்தினர் சொல்வதுபோல் இருக்கலாம். ஆனால் பெரும்பான்மையாக, தாங்கள் இருக்கும் இடங்களை விட்டு வேறு இடங்களுக்குப் போகும் மனப்பான்மை—தாங்கள் இருக்கும் இடங்கள் நெருக்கடியாக இருந்தால்கூட—அவர்களிடம் இல்லை.

Appointment to the Ministerial Service

* 26 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of SRI M. C. Muthukumaraswamy) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மினிஸ்டீரியல் ஸெர்விஸில் தாற்காலிக, நிரந்தர வேலைகளுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் வகுப்புவாரித் தேர்வு முறை இல்லா வேலை தேடித்தரும் ஸ்தாபனங்களால் பின்பற்றப்படுகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No Sir.

Preparation of medicines by Devasthanams

* 27 *Q.*—SRI K. B. S. MANI (on behalf of SRI M. C. Muthukumaraswamy) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) அறநிலையப் பாதுகாப்புக்கு உட்பட்ட எத்தனை தேவஸ்தானங்களிலிருந்து ஆயுர்வேதிக் முறைப்படி உயர்ந்த மருந்துகள் தயாரித்து ஏழைகளுக்கு இனாமாகக் கொடுக்க அனுமதி வேண்டுமென அரசாங்கத்திற்கு முறையீடு வந்துள்ளன ?

(ஆ) அவைகளில் எத்தனை தேவஸ்தானங்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) None, Sir.

( ) Does not arise.

SRI K. B. S. MANI : தேவாலய தர்மகர்த்தாக்கள், இந்த மருந்துகள் என்னென்ன பலன்கள் எவ்வளவு எவ்வளவு அளிக்கின்றன என்று பரீட்சித்துப் பார்த்த பிறகு அவைகளை வெளியே அனுப்புகிறார்களா, அல்லது பரீட்சிக்காமலே மக்களுக்குக் கொடுத்து மக்களிடத்தில் அவைகளைப் பரீட்சிக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆயுர்வேத முறைப்படி மருந்து தயாரித்து மக்களுக்குக் கொடுக்க எத்தனை தேவஸ்தானங்கள் முன் வந்திருக்கின்றன என்று மூலக் கேள்வியில் கேட்கப்பட்டது. அதற்கு, "ஒரு தேவஸ்தானமும் முன் வரவில்லை" என்று நான் பதில் சொன்னேன்.

Polytechnics

* 28 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the total number of Polytechnics in the State, district-war;

(*b*) the total number of students studying in all the polytechnics; and

(*c*) the number of students studying in each polytechnic?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*), (*b*) & (*c*) A statement [a] is laid on the table of the House.

---

[a] Printed as Appendix III on pages 93 94 infra.